# அனைத்துலகச் சைவ மாநாடு - 2016

**"சிவாகமங்களும் திருமுறைகளும் புலப்படுத்தும் சைவப் பண்பாட்டுக் கூறுகளும் சமூக நல்லிணக்கச் சிந்தனைகளும்"**

# ஆய்வடங்கல்

**ISC**
**2016**

பெப்ரவரி - 12,13,14 - 2016
இந்துநாகரிகத்துறை,
கலைப்பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை.

முதலாவது அனைத்துலகச் சைவ மாநாடு - 2016
ISSN No : 2478 - 0634

**பதிப்பாசிரியர் குழு**

**பிரதம பதிப்பாசிரியர்**

பேராசிரியர் கலாநிதி மா. வேதநாதன்

**பதிப்பாசிரியர்கள்**

திரு. ப. கணேசலிங்கம்

கலாநிதி (திருமதி) சுகந்தினி சிறீமுரளிதரன்

கலாநிதி (திருமதி) விக்னேஸ்வரி பவனேசன்

திரு. ச. முகுந்தன்

திரு. ச. பத்மநாபன்

திரு. பொ. சந்திரசேகரம்

திரு. சி. ரமணராஜா

திரு. தி. செல்வமனோகரன்

திரு. க. கந்தவேள்

**பொறுப்புக்கூறல்**

இவ்வாய்வடங்கலில் இடம்பெற்றுள்ள ஆய்வுக்கட்டுரைகளின் அனைத்துக் கருத்துக்களுக்கும் குறித்த கட்டுரைகளின் ஆசிரியர்களே முழுப்பொறுப்பாளிகள் ஆவர்.

# பெரியபுராணம் காட்டும் அரசியல் - ஒரு வரலாற்று நோக்கு

க. அருந்தவராஜா

**ஆய்வுச் சுருக்கம்**

*சோழர்காலத் தமிழக வரலாற்றினை அறிந்துகொள்வதற்கு முக்கியமான இலக்கிய ஆதாரங்களிலொன்றாகப் பெரியபுராணம் விளங்குகிறது. இவ்விலக்கிய ஆதாரமானது வெறுமனே சமய இலக்கியமாகப் பார்க்கப்பட்டு வந்த நிலைமாறி இந்திய வரலாற்றினை அதுவும் குறிப்பாகத் தமிழக வரலாற்றில் சோழர் காலத்தினை அறிந்துகொள்ளுவதற்கான ஒரு வரலாற்று இலக்கியமாகவும் பார்க்கப்படுகிறது. இதனால் தமிழகச் சோழர்கால வரலாற்றினை அறிந்துகொள்ள விரும்புகின்ற எவரும் பெரியபுராணத்தினை ஒதுக்கிவிட்டு அதனது வரலாற்றினை நகர்த்த முடியாதென்பதே உண்மை. அந்தவகையில் இது தருகின்ற வரலாற்றுச் செய்திகளில் அரசியல் சார்பான செய்திகளே பிரதான இடத்தினை வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. அத்தகைய செய்திகளில் ஆட்சிமுறைகள், ஆட்சியாளர்கள், அவர்களது நடவடிக்கைகள் மற்றும் கடமைகள், தானங்கள், போர் நடவடிக்கைகள் என்பன குறிப்பிடத்தக்கன. மேலும் பெரியபுராணம் தருகின்ற தரவுகளை இந்திய வரலாற்றினை அறிந்துகொள்ளுவதற்கு கிடைக்கின்ற பிற தொல்லியல் மற்றும் சாசனவியல் சான்றுகளின் உதவியுடன் உறுதிப்படுத்தக்கூடியதாகவும் உள்ளது. இவ்வாய்விற்கு முன்னோடியான ஆய்வுகள் எனச் சொல்லக்கூடியதாக ஒரு சில ஆய்வுகள் இவ்விடயமாக இருந்தாலும் அவை விரிவான ஆய்வுகளாக அமையாமல் காணப்படுகின்றமையானது ஆய்வில் ஆய்வாளர் எதிர்நோக்கிய முக்கியமான பிரச்சினையாகக் காணப்படுகிறது. எனவே பெரியபுராணத்திலிருந்து சோழர் காலத்தினது அரசியல் சார்ந்த வரலாற்றினைப் பிரித்துப் பார்த்து தனித்து வரலாற்று நோக்கில் ஆராய்ந்தவர்கள் குறைவாக இருப்பதனாலும், வருங்கால ஆராய்ச்சியாளர்களுக்கு இவ்வாய்வினை ஆவணப்படுத்தி அவர்களது ஆய்விற்கு வழிசமைப்பதும் ஆய்வினது பிரதான நோக்கங்களாக அமைகின்றன. வரலாற்று அணுகுமுறையின் அடிப்படையில் அமைக்கப்பட்ட இவ்வாய்வில் பெரியபுராணமே பிரதான முதந்தர ஆதாரமாகவும் பின்னாளில் பெரியபுராணத்தினை அடிப்படையாக வைத்து எழுதப்பட்ட நூல்கள், கட்டுரைகள், இணையத்தரவுகள் போன்றன இரண்டாந்தர ஆதாரங்களாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. அவ்வகையில் தமிழக வரலாற்றில் அதுவும் குறிப்பாகச் சோழர் காலத்தின் அரசியல் வரலாற்றினை அறிந்துகொள்ளுவதில் பிரதான ஆதாரங்களிலொன்றாகப் பெரியபுராணமானது விளங்கி வருவதுகுறிப்பிடத்தக்கதாகும்.*

**திறவுச்சொற்கள் :** பெரியபுராணம், மெய்க்கீர்த்தி, ஆட்சிமுறை, படை நடவடிக்கைகள், அரச உறுப்புக்கள்

**அறிமுகம்**

சைவ இலக்கியங்களில் முடிமணியாக விளங்குகின்ற சைவத்திருமுறைகளில் ஒன்றான பெரியபுராணமானது பக்திநெறியில் நின்று இறைவனுக்கும் இறையடியார்களுக்கும் தொண்டுகள் செய்து முத்தியடைந்த அறுபத்துமூன்று அடியார்களின் வரலாற்றினைக் கூறுகின்றது. திருத்தொண்டர் புராணம் எனவும் சிறப்பிக்கப்படுகின்ற இது பன்னிருதிருமுறைகளில் பன்னிரண்டாவதாகக் காணப்படுகின்றமை குறிப்பிடத் தக்கதாகும்.

சோழ மன்னனாகிய அநபாயச் சோழன் எனப்படுகின்ற இரண்டாம் குலோதுங்க மன்னன் காலத்தில புலியூர்கோட்டத்திலே குன்றத்தூர் நாட்டினிலே வேளாளர் மரபினில் அருண்மொழித்தேவர் என்ற இயற்பெயரினைக்கொண்ட சேக்கிழாரினால் படைக்கப்பட்ட இலக்கியமே இப்பெரியபுராணமாகும். சிறந்த சோழர்கால வரலாற்று இலக்கிய மூலமாக வரலாற்று அறிஞர்களால் கருதப்படுகின்ற இது தருகின்ற வரலாற்றுத் தகவல்களில் பிரதான இடத்தினைப் பெறு

*கலாநிதி, சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் - I, வரலாற்றுத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*
*(arunn.msu@gmail.com)*

வது அரசியல் செய்திகளே. ஆட்சிமுறை, போர், படை, அமைச்சு, நட்பு, அரண், அரசனது கடமைகள் எனப் பல்வேறு அரசியல் சார்ந்த செய்திகளை இது கால அடிப்படையில் தெளிவாகத் தருகிறது. இவ்வாறு பெரியபுராணம் தருகின்ற வர லாற்றுச் செய்திகளின் மூலமாக அக்காலத்து ஆட்சிமுறையின் சிறப்புக்களை இலகுவாக அறிந்துகொள்ள முடிகிறது.

**தோற்றமும் சூழ்நிலையும்**

ஆதியில் தோன்றிய மனிதர்கள் தங்களது வாழ்வினை இயற்கையுடன் இணைத்துக் கொண்டனர். அச்சமயத்தில் இயற்கையினது சீற்றத்துக்குப் பயந்த அவர்கள் அவற்றினை காலப்போக்கில் தெய்வமாகக் கருதி வழி பட ஆரம்பித்தனர். இத்தகையதொரு பின் னணியிலேதான் மதங்களது தோற்றம் ஆரம்பித்தது. அத்தகைய மதங்களிலொன்றான சைவசமயத்தின் முழுமுதற்கடவுளாக விளங்கு கிற சிவபெருமானது அருட்திருப் பெருமை களைப் பலரும் பாடப், பின்னர் அது பன்னிரு திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டதெனலாம்.

கி.பி 6ஆம் நூற்றாண்டுக் காலத்தில் தென்னிந்திய அரசியல் வரலாற்றில் பல்லவர்களது எழுச்சியுடன்புதியபரிமாணங்கள் பல உருவெடுத்தன. இத்தகைய பல்லவர்களது காலத்தினை முடிவிற்குக் கொண்டுவந்து கி.பி 9ஆம் நூற்றாண்டின் பின்னராக தென்னிந்தியாவிற்கு அப்பால் கடல் கடந்து பேரரசினை நிறுவித் தமிழர்களுக்குப் பெருமை சேர்த்தவர்களாக அடுத்து ஆட்சியமைத்த சோழர்கள் கருதப்படுகின்றனர். ஆட்சி அதிகாரத்திலும் சரி நிர்வாகச் சிறப்பிலும்சரி ஆதிக்க விஸ்தரிப்பிலும்சரி பொருளாதாரக் கட்டமைப்பினை உருவாக்குவதிலும் அவர் களுக்கு நிகர் அவர்களே. தஞ்சாவூரினை மையமாகக்கொண்டு ஏறத்தாழ நான்கு நூற்றாண்டுகள்வரை இப்பேரரசு நீடித்தி ருந்தமை குறிப்பிடத்தக்கது. விஜயாலய சோழன், முதலாம் ஆதித்தசோழன், முதலாம் பராந்தக சோழன், முதலாம் இரா ஜேந்திரசோழன், வீரராஜேந்திரசோழன், முதலாம் குலோதுங்கசோழன், இரண்டாம் குலோதுங்கசோழன் போன்றவர்களது சிறப்பான ஆட்சியானது சோழர்களது மேற் கூறப்பட்ட சிறப்பிற்கு மேலும் பெருமை யினைச் சேர்த்தன எனலாம்.

இத்தகைய சோழர்களின் சிறப்புக்களை அறிந்துகொள்ளுவதற்கு மெய்க்கீர்த்திகள், கல்வெட்டுக்கள், இலக்கியங்களெனப் பெருமளவிலான ஆதாரங்கள் கிடைக் கின்றபோதும்கூட அத்தகைய ஆதாரங்களில் இலக்கியங்கள் வரிசையில் உள்ளடக்கப் படுகின்ற பெரியபுராணத்திற்கும் குறிப்பிடத் தக்க பங்கு இருக்கின்றதென்பதனை எவரும் மறுக்கமுடியாது.

அநபாயச்சோழ மன்னனது காலத்தில் சமண மதத்தினுடைய செல்வாக்கானது படிப்படியாக வளர்ச்சியடைய ஆரம்பித்தது. சிற்றின்பப் பகுதிகளை உள்ளடக்கிய சமண மதத்தினுடைய காவியமான சீவகசிந்தாமணியினை அரசனும் ஆதரித்து நின்றான். இந்நிலையினைக் கண்டு மனதளவில் பாதிக்கப்பட்டிருந்த உத்தம சோழப்பல்லவர் என்று புகழ் பெற்றவரும் முதல் மந்திரியாகப் பதவி வகித்தவருமான சேக்கிழார் என்பவரால் சைவத்தின் மகிமையினை உணரச்செய்து அரசனை நல்வழிப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தில் எழுதப்பட்டதே பெரியபுராணமாகும். உத்தம சோழப் பல்லவரென்பது பல்லவரை வென்ற சோழ அரசனால் உத்தமர் என்று தெரிந்துகொடுத்த பட்டமெனக் கருத்துப்படும். மேலும் சுந்தரர் பாடிய திருத்தொண்டர் தொகையினை முதன் நூலாகவும் நம்பியாண்டார்நம்பி அருளிய திருத்தொண்டர் திருவந்தாதி யினை வழிநூலாகவும் கொண்டு இது

அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இது இரண்டு காண்டங்களையும் பதின்மூன்று சருக்கங்களையும் 4287 விருத்தப்பாக்களையும் கொண்டுள்ளது. இதில் பிற்காலத்தில் இடைச்செருகல்களாகச் சில பாடல்களும் சேர்க்கப்பட்டுள்ளன.[1]

பெரியபுராணத்தில் சொல்லப்பட்ட அறுபத்துமூன்று நாயன்மார்களில் மங்கையற்கரசியார், இசைஞானியார், காரைக்காலமையார் ஆகிய மூவருமே பெண்ணடியார்களாகத் திகழ்கின்றனர். குடிமக்கள் காப்பியம் என்ற வகையிலும்கூட இப்பெரிய புராணமானது சிறப்புற்று விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

**அரசியலும் பெரியபுராணமும்**

தமிழ்மொழியில் தோன்றிய எல்லாப் புராணங்களும் கிட்டத்தட்ட ஆதியில் வடமொழியில் இடம்பெற்றவை. அதே நேரத்தில் பெரியபுராணமானது வடமொழியில் தோன்றியதல்ல. அதற்கு மூலமாக அமைந்தது தமிழே. தமிழ் மொழியிலிருந்த பெரியபுராணத்தினை உபமன்யுபக்தவிலாசமென வடமொழியில் பிற்பட்ட காலங்களில் மொழிபெயர்ப்புச் செய்தமை குறிப்பிடத்தக்கது.[2] அந்த வகையில் தென்மொழியிலிருந்து வடமொழிக்குச்சென்ற ஒரே நூலாக நாம் பெரியபுராணத்தினைக் குறிப்பிடலாம். இத்தகைய புகழ்மிக்க பெரியபுராணமானது வரலாற்றுத் தகவல்களைச்சுவைநயத்துடன் தருகின்ற மிகச்சிறந்த இலக்கியமாகவும் கருதப்படுகிறது.

உண்மையில் பெரியபுராணம் என்ற பெயரானது சேக்கிழாரினால் சூட்டப்பட்ட பெயரல்ல. இது பெரியோர்களது வரலாற்றினைக் கூறுவதாலும் ஓதுவோர்க்குப் பெருமையினைச் சேர்பதாலுமே இது பெரியபுராணம் என்ற பெயரினைப் பெற்றது. புராணம் என்று உலகவழக்கில் கூறப்பட்டாலும்கூட இது புனைந்துரைக்கப்பட்டதன்று.[3]

அரசு என்பதற்கு தலைமையானவன் என்பதே பொருள். ஆதிகால மனிதன் தன்னைப் பகைவர்களிடமிருந்தும் விலங்குகளிடமிருந்தும் காப்பதன் பொருட்டுத் தன்னைவிட வலிமையானவன் ஒருவனைத் தலைவனாகத் தேர்ந்தெடுத்தான். இவனே பின்னாளில் அரசனாக மாறினான். பெரிய புராணத்தில் காட்டப்படுகின்ற அறுபத்து மூவரில் பதினொருவர் அரசமரபினைச் சேர்ந்தவர்களாகக் காணப்படுகின்றனர். இடங்கழியார், ஐயடிகள் காடவர்கோன், சுழறிற்றறிவார் (சேரமான் பெருமான் நாயனார்), சுழற்சிங்கர், நின்றசேர்நெடுமாறர், கூற்றுவர், கோச்செங்கட்சோழர், நரசிங்க முனையரையர், புகழ்ச்சோழர், மங்கையற்கரசியார், மெய்ப்பொருளார் போன்றவர்களே அரசமரபினைச் சார்ந்தவர்களாகக் கருதப்படுகின்றனர். இவர்களில் மெய்ப் பொருளாளர், புகழ்ச்சோழர், சுழற்சிங்கர், கழற்றறிவார் போன்றவர்கள் குறிப்பிடத் தக்கவர்கள்.[4] எனவே சோழர்காலத்தில் நிலவிய அரசியல்முறை பற்றிப் பல்வேறு தகவல்களைப் பெரியபுரா ணத்திலிருந்து அறிந்துகொள்ள முடிகின்ற தெனலாம்.

பெரியபுரணம் தோன்றுவதற்கு மூலமாக இருந்தவை சுந்தரமூர்த்திநாயனாரின் திருத்தொண்டர்தொகையும் நம்பியாண்டார்நம்பி பாடிய திருத்தொண்டர் திருவந்தாதியும் என்று கூறப்படுகிறது. இத்துடன் மூவர் முதலிகள் அருளிய திருமுறைகள், காரைக்கால் அம்மையார் பாடிய மூத்த திருப்பதிகம், இரட்டை மணி மாலை, அற்புதத்திருவந்தாதி, சேரமான் பெருமாள் இயற்றிய திருக்கைலாய ஞான

வுலா, பொன்வண்ணத்தந்தாதி, திருவாரூர் மும்மணிக்கோவை என்பவைகளும்கூட சேக்கி ழாரினால் பயன்படுத்தப்பட்டுள்ளன.

அரசர்கள் ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டிய பொதுவான பண்புகள் பற்றி வள்ளுவர் குறிப்பிடுகிறார். நான்கு வகையான படைக்கலன்கள் அதாவது தேர்ப்படை, யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை போன்ற படைகளை அரசன் கொண்டிருக்க வேண்டுமென அவர் குறிப்பிடுகின்றார். மக்கள் சிறந்த அறச்செயல்களை ஆற்றுகின்ற குணம் படைத்தவர்களாகத் திகழ வேண்டுமெனவும் மன்னன் ஆட்சி செய்கின்ற நாடானது நீர்வளம் நிறைந்ததாக இருக்க வேண்டுமெனவும் அரசன் என்பவன் மதிநுட்பம், வினைத்திறன், சமயோசித புத்தி, கற்றறிந்த அறிவும் சிறந்த செயலைத்தயங்காமலும் ஆராய்ந்து செய்கின்ற தகமை கொண்டவனாகவும் இருத்தல் வேண்டுமெனவும் கூறுகிறார்.

மேலும் அரசனது தவறினை சுட்டிக்காட்டி அவனை வழிநடாத்தக்கூடிய திறன் கொண்ட அமைச்சனை அரசன் பெற்றிருக்க வேண்டும். உற்றுழி உதவும் நல்ல நட்பினைப் பெற்றிருத்தல் வேண்டும். நாட்டினது பாதுகாப்பிற்கு அவசியமான காட்டரண், நாட்டரண், அகழி, மதில் கொண்டதாக அரசு இருக்க வேண்டும். இத்தகைய உறுப்புக்களை ஒருங்கே அமையப் பெற்ற மன்னன் அரசர்களுக் கெல்லாம் சிங்கம் போன்று விளங்குவான் என மேலும் திருவள்ளுவர் கூறுகிறார்.[5] அத்துடன் அஞ்சாமை, ஈகை போன்ற பண்புகளும் அவனிடம் இருக்க வேண்டுமெனவும் அவர் விவரிக்கின்றார்.

**படை**

பெரியபுராணத்திலும் அரசனுக்கு இருக்க வேண்டிய உறுப்புக்கள் பற்றி விபரிக்கப்படுகிறன. முத்தநாதன் என் பவன் பலமுறையும் யானை, குதிரை, காலாட்படைகளைக் கொண்டு போரிட்டு மெய்ப்பொருளாரிடம் தோற்றோடிய சம்பவமானது கூறப்படுகின்றது. இதனால் முத்தநாதனுடைய படைகளை எதிர்க்கின்ற படைக்கலன்களை மெய்பொருளாரும் பெற்றிருந்தாரென்பது அறியத்தக்கது.

"பொன்னணி ஓடை யானைப்
பொருபரி காலாள் மற்றும்
பன்முறை இழந்து தோற்றுப்
பரிபவப்பட்டுப்போனான்" [6]

என்ற அடிகள் இதனை மெய்ப்பிக்கின்றன.

புகழ்சேர் நாயனாருடைய படைகள் மேகக் கூட்டங்கள்தமது இனங்கள் என்று கருதும்படி கருமையான நிறத்துடன் முகபடாம் அணிந்த யானைகள் மதநீரைப் பொழிந்து பிளிறிக் கொண்டு வரிசை வரிசையாக நிற்கும் படியும் தொழுவங்கள் தோறும் புல்லைத்தின்று கொண்டு வாய்நீர் ஒழுகக் கனைக்கின்ற குதிரைகள் கடல்போல் நிறைந்து விளங்கும் படியாகவும் பெரிதுபட்டிருந்தன. இதனைப் பின்வரும் அடிகளால் உணரலாம்.

"கார்முகிலும் படிதெரியா
களிற்றுநீரைக் களமெல்லாம்" [7]

"நெடுநிரைமுன் புல்லுண்வாய் நீர்த்தரங்க
நுரைநிவப்ப விடு சுடர் மெய் உறை
அடுக்கள் முகில் பழய விளங்குகுதலால்
தொடுகடல்கள் அனையபல
துரங்காசா லைகளெல்லாம்" [8]

**அமைச்சு**

சிறந்த அமைச்சன் எத்தகைய குணங்கள் கொண்டிருக்க வேண்டுமென வள்ளுவர் குறிப்பிடுகின்றார். அதாவது அவனிடம் கண்டிப்பு, குடிகாத்தல், கற்றல், அறிதல், விடாமுயற்சி என்பனவற்றுடன் நாட்டில் நடைபெறுகின்ற நிகழ்வுகளை அரசன் அறிவ தற்கு முன்னதாக அறிகின்ற திறனை அவன் பெற்றிருக்க வேண்டுமென வள்ளுவர்

"வன்கண், குடிகாத்தல், கற்றுஅறிதல்,
ஆள்வினையோடு
ஐந்துடன் மாண்டது அமைச்சு [9]

பெரியபுராணத்தில் இது மனுநீதிச்சோழனுடைய வரலாற்றில் வருகின்ற அமைச்சன் அரசனுடன் உற்றுழி இருந்து நாட்டில் நடக்கின்ற வினைகள் முழுவதனையும் அறிந்து தீவினைகளைத் தாமே சரி செய்துவிடும் திறமுடையதாக விளங்கியதனை மேல்வருமாறு சேக்கிழார் கூறகிறார்.

"முன்னுற நிகழ்ந்த எல்லாம் அறிந்துளான்
முதிர்ந்த கேள்வித்
தொன்னெறி அமைச்சன் மன்னன் தாளினை
தொழுது செல்வான்" [10]

பேரரசர்களுக்குத் திறை செலுத்தாமலும் அவர்களது ஆணைகளுக்கு அடங்காமலும் நடந்துகொள்ளுகின்ற சிற்றரசர்களின்மீது படையெடுப்பினை மேற்கொண்டு அவர்களை அடிமைப்படுத்துவதென்பது அமைச்சர்களது முக்கியமான கடமைகளிலொன்றாகக் கருதப் பட்டது. இதனைப் பெரியபுராணத்தில் காணப்படுகின்ற மேல்வரும் வரிகள் புலப் படுத்துகின்றன. "ஈங்குநுமக் கெதிர் நிற்கும் அரணுளதோ" [11] எனப் புகழ்ச்சோழர் கூறித் தமது அமைச்சர்களை அதிகன்மீது ஏவியதாகக் குறிப்புக்கள் உள்ளன.

மேலும் குடிகளுக்கு எவ்விதமான தீங்கும் அநீதிகளும் ஏற்படாதவாறு பாதுகாப்பதென்பதும் அமைச்சர்களது கடமைகளாகும். யாராவது சமூகத்தில் பெரியவர்கள், செல்வாக்குள்ளவர்கள் என்பவர்களை விசாரணையின் பொருட்டு மந்திரி சேனையுடன் சென்று அழைத்து வந்தமைக்கான குறிப்புக்களும் உள்ளன. குணபரன் என்ற மகேந்திரவர்மன் தன்னுடைய சமணக் குருமார்களது சொற்கேட்டு வாகீசரை அழைத்துவந்த நிகழ்வினைக் குறிப்பிடலாம். இருப்பினும் சோழப் பெருமன்னர் காலத்திலும் இத்தகைய நிகழ்வுகள் பல இடம்பெற்றமைக்கான ஆதாரங்கள் உள்ளன.

**நட்பு**

"முகநக நட்பது நட்பன்று : நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு"[12]

என நட்புத் தொடர்பாகத் தனது எழுத்தினை வள்ளுவர் முன்வைக்கிறார். அதாவது நட்பானது முகம் மலரும் படியாகச் செய்வதில்லை எனவும் அது நெஞ்சம் மலரும் படியாக உள்ளன்பு கொண்டு செய்தாக இருக்க வேண்டுமென்கிறார் திருவள்ளுவர். சங்க இலக்கியங்களும் சிறந்த நட்பிற்குப் பல எடுத்துக்காட்டுக்களை முன்வைக்கிறன. அவ்வாறே மகாபாரதத்திலும் பல உதாரணங் கள் உள்ளன.

பெரியபுராணத்தில் சேரமான் பெருமாள் நாயனார் மற்றும் சுந்தரருடைய நட்பினையும் சிவபெருமான் மற்றும் சுந்தரருடைய நட்புப் பற்றியும் பேசுகிறது. சேரமான் பெருமாள் நாயனார் ஈகைத் தன்மை கொண்ட சோழ மன்னனுடனும் அரசுரிமையுடைய பாண்டிய மூவேந்தர்களும் மனுநீதி முறைப்படி ஆட்சி செய்தனர். அளவற்ற அரசர்கள் சேரருக்குத் திறை கொணர்ந்து செலுத்திப் பணிந்தார்கள். கழறிற்றறிவாராகிய சேரலனார் அகத்தும் புறத்தும் பகையறுத்து செங்காலாட்சி மேற்கொண்ட சிறப்பினை மேல்வரும் அடிகள் புலப்படுத்துகின்றன.

"உலகுபுரக்குங் கொடைவளவர்
உரிமைச்செழியர் உடன்கூட
நிலவு பெருமுக் கோக்களாய் நீதி மனுநூல்
நெறிநடத்தி
அலகில் அரசர் திறைகொணர
அகத்தும் புறத்தும் பகையறுத்து" [13]

**அரண்**

அரண்கள் என்பவை நாட்டினது பாது காப்பிற்கு இன்றியமையாதவையாக விளங் குகின்றன. புகழ்ச்சோழநாயனாருடைய அகழியானது கற்பகதரு, ஐராவதம் எனும் யானை, உச்சைச்சிரவம் என்ற குதிரை, இலக்குமி, சிந்தாமணி, அமுதம் ஆகிய இவற்றையெல்லாம் தேவர்கள் எடுத்துச் சென்றமையினால் வருந்திய பாற்கடல் இவற்றில் ஒன்றையேனும் மீளப் பெறுவதற்கு விரும்பி விண்ணுலகத்தினை அடைந்து வளைந்தது போல அமைந்திருந்ததென்பதனை பெரியபுராணம் மேல்வருமாறு கூறுகிறது.

"துளைக்கைஐரா வதக்களிறுந்
துரங்கஅர சுந்திருவும்
விளைத்த அமு துந்தருவும்
விழுமணியுங் கொடுபோக
உளைத்தகடல் இவற்றொன்று
பெறவேண்டி உம்பரூர்
வளைத்ததுபோன் றுதளங்கண்
மதில்சூழ்ந்த மலர்க்கிடங்கு" [14]

இதன்மூலமாகப் புகழ்ச்சோழர் பலவிதமான படைகளையும் அரண்களையும் பெற்றுத் திகழ்ந்தார் என்பது வெளிப்படையாகும்.

**அரசரின் கடமைகள்**

அரசன் என்பவன் காட்சிக்கு எளியவனாக இருத்தல் வேண்டும். நிதி கேட்டும் நீதி கேட்டும் வருகின்ற மக்களை சந்திக்கின்றபோது அவன் கடுமையான சொல் பேசாது இனிமையாகப் பேசுகின்ற தன்மை கொண்டவனாக இருத்தல் வேண்டும். பெரியபுராணத்தில் வருகின்ற மனுநீதிச்சோழன் புராணத்தில் பசுவின் கன்றானது இளவரசன் வந்த தேரில் நசியுண்டு இறந்தபோது மன்னர்களும் அந்தணர்களும் அமைச்சர்களும் இச்செயலுக்குக் கழுவாய் தேடலாம் என்று கூறியபோது மனுநீதிச் சோழன்,

"மாநிலங்கா வலனாவான்
மன்னுயிர்க்காக் குங்காலைத்
தானதனக் கிடையூறு தன்னால்,
தன் பரிசனத்தால்
ஊனமிகு பகைதிறத்தால்,
கள்வரால், உயிர், தம்மால்
ஆனபயம் ஐந்துந்தீர்த்து
அறங்காப்பான் அல்லனோ [15]

என்றுகூறிப் பரிகாரம் தேடாமல் தனது மகனையே பசுவிற்காகக் கொலை செய்தான். இவ்வாறே பொற்கைப்பாண்டியன் மக்களது நன்மையினைக் கருத்தில் கொண்டு தன்னுடைய கையினைத் தானே வெட்டினான். தான் வழங்கிய தீர்ப்பானது தவறென்று தெரிந்தவுடன் பாண்டிய மன்னன் தன்னுடைய உயிரையே மாய்த்தான். புறாவின் உயிரினைக் காப்பாற்றத் தனது தசையினை அறுத்துக் கொடுத்தவன் சிபிச்சக்கரவர்த்தி. புகழ்ச் சோழநாயனார் பகையரசர்கள் தமது ஏவல் கேட்டு வாழுமாறும் உலகம் முழுவதும் ஒரு குடையின்கீழ் ஆட்சி புரிந்த சிறப்பினைச் சேக்கிழார் மேல்வருமாறு கூறுகிறார்.

"ஒரு குடைக்கீழ் மண்மகளை
உரிமையினில் மணம்புணர்ந்து
பருவரைத்தோள் வென்றியினால்
பார்மன்னர் பணிகேட்பத்
திருமலர்த்தும் பேருலகுஞ்
செங்கோலின் முறை நிற்ப" [16]

அரசர்களது அடையாளமாக வெண்குடையும் செங்கோலும் ஆணைச்சக்கரமும் காணப்பட்டன. மேலும், மக்களைப் பாதுகாத்த லென்பது அரசனது பிரதான கடமையாகும். அதாவது அவர்களது உடலையும் உடம்பினையும் காப்பவனாக அரசன் இருத்தல் அவசியம். சமயத்தினைப் பாதுகாப்பதும் கூட அவனது பிரதான கடமைகளிலொன்றாகவே கருதப்பட்டது. இது சம்பந்தர், அப்பர்

ஆகியோர்களது புராணங்களிலே சமணர்கள் தமது அரசர்களிடம் சொல்லி அவர்களைத் தமது சமயத்தின்பால் தூண்டுவதனை வரலாற்றின் மூலமாக அறியலாம்.

**ஆட்சிமுறை**

சோழர் காலத்தில் காணப்பட்ட அரசியல் முறையினைச் சிறப்பாகப் பெரியபுராணம் விவரிக்கிறது. மேற்கூறப் பட்ட ஒரு இடத்தில் குறிப்பிட்டது போன்று செங்கோலையுடைய முடியாட்சி காணப்பட்டதனை அறியமுடிகின்றது. இதனைப் மேல்வருமாறு பெரிய புராணத்தினுடைய அடிகள் விவரிக்கிறன.

"வெற்றி வெண்குடை அநபாயன்
செய்ய கோல் அபயன்" [17]

மேலும், சோழ மன்னர்கள் சூரிய குலத்தினைச் சேர்ந்தவர்கள் என்பதனையும் பெரியபுராணத்தில் காணப்படுகின்ற பாடல் வரிகள் எடுத்துக்காட்டுகின்றன. மேலும் சோழர்களது பண்டைய அரசர்களைப் பற்றிய தகவல்களையும் பெரியுபுராணம் தருகிறது. இதனைப் மேல்வருமாறு அறியலாம்.

"அநபாயன் வழிமுதல் மின்னும் மாமணிப் பூண்
மனு வேந்தனே" [18]

"துலையில் புறாவின் நிறையளித்த சோழர் உரிமைச்
சோணாட்டில் அலையில் தாளம்
அகிலொடு சந்து" [19]

மேற்கூறப்பட்ட இத்தகைய வரிகள் மனுநீதி வழித்தோன்றல் அநபாயன் எனவும் சிபிச்சக்கரவர்த்தியின் வழித்தோன்றல் கோங்செங்கணார் என்பதனையும் உணர்த்துகின்றன. இதன் மூலமாகச் சோழர்களது ஆட்சி உரிமையானது வாரிசுரிமையின் அடிப்படையில் அமைக்க ப்பட்டிருந்ததனை அறிய முடிகிறது. மேலும் சோழர் காலத்தில் பேரரசு மற்றும் சிற்றரசு முறைகளும் காணப் பட்டமை கவனிக்கத்தக்கது. [20]

பெரியபுராணத்தில் சொல்லப்படுகின்ற தகவல்களின் பிரகாரம் சோழர்குல முடியானது தில்லைவாழ் அந்தணர்களினால் பாதுகாக்கப்பட்டதாக அறியமுடிகிறது. எத்தகைய வெற்றியினையும் செல்வத்தினையும் உடையவராயினும் அவர்கள் சோழர்குலம் அன்றேல் மற்றவர்களுக்கு முடிசூட்ட மாட்டார்களென்பதனை மேல்வரும் வரிகள் உணர்த்துகின்றன.

"செம்பியர் தம் தொல்லை நரும்
குலமுதலோர்க்கு அன்றிச்சூட்டோம் முடி"

இதனைச் சிறப்பாக ஆராய் கின்றபோது அரசியற் கண்ணோட்டத்தில் இவர்களது இந்துசமயம் சார்ந்த உணர்வானது மேம்பட்டு நிற்பதனை அறியமுடிகின்றதெனலாம். மதத்துடன் அரசியல் மிகவும் நெருக்கமான தொடர்புடன் இருந்தது மட்டுமன்றி அக்கால அரசியலைச் சிறப்புறவும் செய்துவந்தமை குறிப்பிடத்தக்கது. சோழ மன்னர்களது ஆட்சியின் நெறிமுறையில் நீதிக்கு இலக்கணமாகத் திகழ்ந்தவை மனுநூல்களும், வேதநெறிகளும் தர்மநூல்களுமாகும்.

அரசியலில் ஆணுக்குப் பின்னதாக ஆட்சிக்கு வருபவன் இளவரசன் என அழைக்கப்பட்டான். இத்தகைய பதவிக்கான தகுதிகள் தொடர்பாகவும் சிலப்பதிகாரத்தில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. அதாவது தினமும் முயன்றசிவபரம்பொருளை அடையச் செய்யும் வேதம், ஆகமம், முதலான தெய்வீகக் கலைகளை திருந்தக் கற்றத் தேர்ந்தவனாகத் தனது குலத்திற்குரிய குதிரை, யானை, தேர்ப் படை முதலான படைத் தொழில்களும் பயின்றவனாய் எல்லைக்கடங்காத கல்விகளில் தேர்ந்து விளங்கிய அரசகுமாரன் பெறுவதற்கு அரிய தந்தையின் மனம் மிகுந்த அன்பும் பாராட்டும் பெறும் வகையில் ஓங்குகின்ற நற்குணத்தால் பெருகி இளவரசப் பட்டம்

அடைகின்ற வகையில் வளரவேண்டு மெனவும் கூறப்பட்டுள்ளது. [21]

பெரியபுராணத்திலிருந்து சோழர்களது தலைநகரம் பற்றியும் சிறப்பாகக் காணப்பட்ட அக்கால நகரங்கள சில பற்றியும் தெரிந்துகொள்ள முடிகிறது. சோழர்களது முக்கியத்துவம் பெற்ற ஐந்து தலைநகரங்கள் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகிறது. குறிப்பாக உறையூர், திருவாதவூர் பற்றிய குறிப்புக்கள் பல பெரியபுராணத்தில் உள்ளன. உறையூரினைத் தலைநகரமாகக் கொண்டவர் புகழ்ச்சோழ மன்னர் என்ற குறிப்புக்கள் இதில் காணப்படுகின்றன. இதற்கு முன்னதாக கருவூர் தலைநகரமாக இருந்ததென்பதனை

"தங்கள் குலமரபின் முதல் தனிநகராம் கருவூரில் மங்கல நாள்........ என்ற பெரிய புராணத்தில் காணப்படுகின்ற வரிகள் எடுத்துக் காட்டுகின்றன.

சேக்கிழார் தருகின்ற சில குறிப்புக்கள் அக்காலச் சோழ மன்னர்கள் மேற்குப் பிற மன்னர்களிடத்தும் கொங்கு நாட்டுச் சிறு மன்னர்களிடத்தும் திறை பெற்றதனைக் கூறுகின்றன. திறைப் பொருட்களாக யானை, குதிரைகள் மற்றும் நீண்ட தொலைவில் ஒளிவீசுகின்ற நவமணிகள் போன்றவை விளங்கின [22]

**போர் நடவடிக்கைகள்**

அக்காலப்பகுதியில் தமிழர்கள் போர் புரிவதில் வல்லவர்களாகத் திகழ்ந்தனர். வேற்றரசர்கள் பலர் இவர்களால் தோற் கடிக்கப்பட்டனர். தேர்ப்படையினர் தேர்ப் படையினருடனும் அவ்வாறே பிற படையினர் தமக்கேற்றவாறான படைப்பிரிவுகளுடனுமே போர் செய்தனர். அக்காலப் படைகளில் வேளாள மக்களே சேனைத் தலைவர்களாகவும் போர் செய்வதில் வல்லவர் களாகவும் திகழ்ந் தனர். இருப்பினும்கூட பிற சமூகத்தவர்களும் படைத்தலைவர்களாக இருந்தமைக்கு சிறுத்தொண்டர் நாயனார் புராணத்திலிருந்து எடுத்துக்காட்டுக்கள் பலவற்றினைக் குறிப் பிடலாம்.

சோழப்படைகள் போருக்குச் செல்லுகின்ற சமயத்தில் அவர்கள் வஞ்சிப்பூவினை அணிந்து சென்றதாக அறியமுடிகின்றது. போரின்போது நடைபெறுகின்ற போர்க்களக் காட்சியினை சிறப்பாகவிவரிப்பதுடன் இவர்களது படைகள் புறமுதுகு காட்டாமல் வீரச்சாவு அடைந்தமை தொடர்பான விபரங்களையும் பெரியபுராணம் தருகின்றது. இவர்கள் பேரின்போது பயன் படுத்திய ஆயுதங்கள் தொடர்பான குறிப் புக்களும் பெரிய புராணத்தில் உள்ளன. வில், கதாயுதம், சம்மட்டி, சக்கரம், உடை, வாள், ஈட்டி, சிறுசூலம், இரும்பு, முள் கொண்டு அமைக்கப்பட்ட ஒருவகையான ஆயுதம், ஒளி திகழுகின்ற அம்பு போன்றன பற்றிய தகவல்கள் பெரியபுராணத்தில் உள்ளன. [23] போரில் வெற்றி பெற்றால் எதிரிகளின் தலைகளைத் தமது நாட்டிற்குக் கொண்டுசெல்லுகின்ற வழக்கத்தினைச் சோழப்படைகள் கொண்டி ருந்தன. இதனை அவர்கள் தமது வழக்கமாகக் கொண்டிருந்தமையென்பதும் குறிப்பிட த்தக்கது. எனவே கைப்பற்றப்பட்ட நாடு களிலிருந்து தலைக்குவியல், நிதிக்கு வியல், மாதர், யானை, குதிரை போன்ற வற்றினையும் இவர்கள் கூடவே எடுத்துச் சென்றமையினை அறியலாம். முதலாம் பரமேஸ்வரவர்மனுடைய படைத் தளபதி யாகக் காணப்பட்ட சிறுத்தொண்ட நாய னார் பற்றியும் மானக்கஞ்சாறநாயனார், ஆயர்க்கோன்சலிக் காமநாயனார், கோட்புலி நாயனார் ஆகிய படை தளபதிகள் பற்றிய தகவல்களையும் பெரியபுராணம் தருகிறது.

**நிறைவுரை**

"குலவித்தை கல்லாமல் பாகம் படும்" என்பதற்கு ஆதாரமாகப் பெரியபுராண

நாயன்மார்கள் பலரும் எம்பெருமானுடைய அடியார்களாக விளங்கியபோதும் தத்தமது மரபிற்கேற்ப அரசியல் வாழ்விலும் விளங்கி யுள்ளனர் என்பது இதனால் அறியப்படுகிறது. உண்மையில் இந்நூலானது நாயன்மார்களது வரலாற்றினைக் கூறுவதுடன் அரசியல்முறை, அரசர்கள், அமைச்சர்கள், குறுநில மன்னர்கள் பற்றியும் அவர்களது கடமைகள், போர்கள் பற்றியும் மேலும் பல சோழர் காலத்து அரசியல் சம்பவங்களைத் தருகின்ற இலக்கிய மூலாதாரமாகவும் திகழ்கின்மை குறிப்பிடத்தக்கது. பெரியபுராணத்தில் சொல்லப்படுகின்ற தகவல்கள் பல உண்மை யான தகவல்களாக இருப்பதனை சாசனங்கள் மற்றும் மெய்க்கீர்த்தி களினூடாக அறிந்து கொள்ளலாம். இது ஒரு இலக்கிய ஆதாரமாகத் திகழ்ந்தாலும் கூடச் சோழப் பெருமன்னர் கால அரசியல் வரலாற்றினைத் தெளிவாக அறிந்துகொள்ள விரும்பு கின்ற எவரும் பெரியபுராணத்தினை விலக்கி வைக்க முடியாதென்பதே உண்மை.

**அடிக்குறிப்புகள்**

01. இராசமாணிக்கனார், மா.,(1945), **சேக்கிழார்,** எடியுக்கேசன் பப்ளிகேசன்ஸ் கம்பனி, சென்னை. ப.7.
02. ரமா,மீ.,(2011), **பெரியபுராணத்தில் மனித நேயம்,** பல்சமய ஆய்வாளர் மன்றம், மதுரை ப.18.
03. செங்கல்வாராயப்பிள்ளை,வ,சு.,(1970), **தேவாரஒளி,** சென்னை.ப.20.
04. நவமணி,மு.,(2011), **அரசியலும் பெரியபுராணமும்,** சென்னை.ப.15.
05. குறள், 381.
06. **பெரியபுராணம்,** பா.471.
07. மு.கு.நூ.பா.3950.
08. மு.கு.நூ.பா.3951.
09. குறள், 632.
10. **பெரியபுராணம்,** பா.115.
11. மு.கு.நூ.பா.3963.
12. குறள், 786.
13. **பெரியபுராணம்,** பா.3774.
14. மு.கு.நூ.பா.3952.
15. மு.கு.நூ.பா.121.
16. மு.கு.நூ.பா.3955.
17. மு.கு.நூ.பா.22.
18. மு.கு.நூ.பா.98.
19. மு.கு.நூ.பா.4202.
20. சுப்பிரமணியமுதலியார்,சி.கே.,(1933),**சேக்கிழார்,** சாது அரசுக்கூடம், சென்னை.ப.24.
21. மு.கு.நூ.ப.27.
22. ஞானசம்பந்தன், அ,ச.,(1987), **பெரியபுராணம் - ஓர் ஆய்வு,** காஞ்சிபுரம் தத்துவமயம்,தஞ்சாவூர். ப.137.
23. மு.கு.நூ.ப.138.